(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 73 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, மார்ச்சு 04, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0053 / ' 08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்கம் (PSMPA) என்பது 1891 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க PSMPA கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நூற்றாண்டு பழமைவாய்ந்த நியதிச்சட்ட நிதி நிறுவனமாகும் என்பதையும்,

(ii) அது, குழுவின் தலைவர், திறைசேரிச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் மற்றும் வாக்கெடுப்பொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 11 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது என்பதையும்,

(iii) அதன் அலுவலகத்துக்கான ஒரு கட்டிடம் 48 மில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கொள்வனவாளருக்கும் (PSMPA) விற்பனையாளருக்கும் இடையில் மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கை இல. 2921 இன் பிரகாரம் தேசிய வீடமைப்பு ஆணையாளரிடமிருந்து ஒரு மாதத்தினுள் PSMPA இற்கான "கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் முழு உடைமை" பெறப்படும் வரை ரூபா 7 மில்லியன் தடுத்து வைத்தல் பணமாக வைக்கப்பட்டதா என்பதை அவர் கூறுவாரா?

(இ) (i) 2006 ஆம் ஆண்டுக்கான PSMPA கணக்குகள் பற்றிய தனது அறிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறிப்பிடப்பட்டவாறு, மூன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இற்றைவரை "கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தின் முழு உடைமை" கிடைக்கப்பெறவில்லை என்பதையும்,

(ii) அறியப்படாத ஏதோ காரணங்களுக்காக தடுத்து வைத்தல் பணத்தில் ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டதையும்

அவர் அறிவாரா?

(ஈ) இவ்விடயம் தொடர்பாக பகிரங்க விசாரணை ஒன்றை நடத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) 1960 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பமாகி 2000 ஆம் ஆண்டு வரையிலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலுமான தசாப்தங்களில் கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, பேராதனை, மொறட்டுவை, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக் கழகங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தர நிலைகள் என்ன என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு விரிவுரையாளர்களை பரஸ்பர அடிப்படையில் அவைகள் பெற்றுக்கொண்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆம் எனில், இறுதியாக விரிவுரையாளர் வருகை தந்த திகதியையும், கடந்த இரண்டு வருடங்களில், அவர்கள் வருகை தந்த பல்கலைக்கழகங்களின் பெயர்களையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒவ்வொரு பீடத்திற்கும், ஒவ்வொரு மாணவனுக்கும் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) விடுதி வசதிகள் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) இவை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறதா அல்லது அவர்கள் கட்டணம் செலுத்த வேண்டுமா என்பதையும்,

(iv) விடுதி வசதிகளை வழங்குவதற்கான தெரிவு நிபந்தனை என்னவென் பதையும்,

(v) விடுதி வசதிகள் அற்ற மாணவர்களுக்காக மேற்கொள்ளப்படும் மாற்று ஏற்பாடுகள் என்னவென்பதையும்,

(vi) சகல மாணவர்களும் தங்குவதற்கேற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட காலத்திட்டம் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஈ) கடந்த 5 வருடங்களாக,

(i) இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அவர்களது நாடு மற்றும் அவர்களிடமிருந்து நாம் ஈட்டிய வருமானம் ஆகியவற்றையும் பல்கலைக்கழக அடிப்படையிலும் வருடாந்த அடிப்படை யிலும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0124 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) உள்நாட்டுக் கடன்களாகவும் வெளிநாட்டுக் கடன்களாகவும் நிலுவையாக இருக்கும் மொத்த அரச கடன்களை,

(i) 1948 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும்,

(ii) 1995 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டுவரையிலும் 2008 ஆம் ஆண்டு முதல் இற்றைவரையிலும் ஒவ்வொரு ஆண்டின் முடிவிலுமாக வெவ்வேறாகவும்

அவர் அறியத்தருவாரா?

(ஆ) மேலே (i) மற்றும் (ii) லுள்ள காலப்பகுதிக்காக வருட அடிப்படையில், மொத்தக் கடன் அழிப்புக்களை (மூலதனம் + வட்டி)யும் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) பின்வரும் நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் மொத்தக் கடன்களை 1948 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரை உள்ளவாறாகவும் 2004, 2005, 2006, 2007 மற்றும் 2008ல் இற்றைய திகதி வரையிலும் கொடுக்கப்பட்ட கடன் களிற்கான சராசரி வட்டி செலவினையும் அவர் குறிப்பிடுவாரா

(i) உலக வங்கி,

(ii) சர்வதேச நாணய நிதியம்,

(iii) ஆசிய அபிவிருத்தி வங்கி,

(iv) சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி,

(v) அமெரிக்கா

(vi) ஜப்பான்,

(vii) ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்,

(viii) இந்தியா,

(ix) சீனா,

(ஈ) வருட அடிப்படையில், கடந்த 05 வருடங்களுக்கான தலா வருமானத்துடன் ஒப்பிடுகையிலான தலா கடனையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0606 / '08

4.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) விசேட கருத்திட்ட அமைச்சுக்காக 2007 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நடைமுறைச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட 37,500,000 ரூபா எப்போதிருந்து செலவிடப்படுகிறது என்பதையும்,

(ii) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) நடைமுறைச் செலவுகளைப் பயன்படுத்தி கொள்வனவுகள் செய்யப் பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) அவ்வாறெனின், எத்தகைய பொருட்கள் எந்தெந்த விலை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்,

(v) மூலதனச் செலவுகளுக்கான 10,800,000 ரூபா நிதி ஒதுக்கத்திலிருந்து குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(vi) அந்தப் பணத்தில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(vii) ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0652 / '08

5.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) குருநாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் மடஹபொல, மெதகந்த மற்றும் பரகஹஎல மலைகளை அண்மித்துள்ள பிரதேசத்திலுள்ள அரச காணிகள் மற்றும் தனியார் காணிகள் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்றையும், மடஹபொல மெதகந்த மற்றும் பரகஹஎல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதியும் விவசாயிகளது காணிகளின் உரிமை சம்பந்தமான சட்ட ரீதியான தன்மை யாது எனும் விபரத்தையும் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) மடஹபொல மற்றும் மெதகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 50 ஏக்கர் காணிக்கு உரிமை இருப்பதாகக் கூறிக்கொள்ளும் நபரொருவர் மேற்படி காணிகளில் வசிப்பவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றா ரென்பதை அவர் அறிவாரா ?

(இ) (i) அத்தகைய தனியார் காணியொன்று மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அக்காணியின் அளவும், தன்மையும் யாதென்பதையும்,

(iii) மேற்படி காணியின் முதலாவது உரிமையாளர் தொடக்கம் இன்றைய உரிமையாளர் வரையிலான உரித்தறிக்கை என்னவென்பதையும்,

(iv) எவரேனும் தனியார் காணி உரிமையாளர் மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வதிவோரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பின் அவர்களுக்கு மாற்றுக்காணிகள் பெற்றுத்தரப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0987 / ’08

6.

கௌரவ எம். டீ. நாமல் கருணாரத்ன,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2007/2008 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள நியமனங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த நியமனங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டன என்பதையும்,

(iii) வடமேல் மாகாணத்தில் அரசின் ஆட்சேர்ப்பு விதிமுறைக்கு அப்பாற்பட்ட வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின் அது எந்த விதிமுறையின் அடிப்படையில் என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) வடமேல் மாகாணத்தில் தொண்டர் அடிப்படையில் அந்தந்த நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0775 / ’ 08

7.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2008.07.22 ஆம் திகதி, இரவு வேளையில், தெற்கு மற்றும் மேற்கு கடற் பரப்பில் ஏற்பட்ட சூறாவளி காரணமாகக் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்தார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சூறாவளியின் விளைவாக மரணமடைந்த மற்றும் காணாமற் போன கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்களின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்,

(iii) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) மேற்படி வள்ளங்களின் உரிமையாளர்களினது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாதென்பதையும்,

(v) காணாமற் போனவர்களினதும் மரணமடைந்தவர்களினதும் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவையென்பதையும்,

(vi) பாதிக்கப்பட்ட கடற்றொழில் வள்ளங்களையும் உபகரணங்களையும் திருத்துவதற்கு வழங்கப்பட்ட உதவிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0776 / '08

8.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான தெவிநுவர தெற்கு கிராம சேவையாளர் பிரிவில், கடலுக்கு மிகவும் சமீபமாக அமைக்கப்பட்டுள்ள "லயிட் ஹவுஸ்" ஹோட்டலின் உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஹோட்டல் அமைக்கப்பட்ட போது கரையோரப் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) கடற் கரையில் ஏதேனும் நிருமாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அதற்கான அனுமதிப்பத்திரத்தை எத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும்,

(ii) அதற்கமைவாக, மேற்படி நிருமாணப் பணிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அச்சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுப் பொறுப்பினை வகித்தது யாரென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஈ) மேற்படி நிருமாணப் பணி சட்ட விரோதமானதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(உ) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

0777 / ' 08

9.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களின் எண்ணிக்கை மற்றும் மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வள்ளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா ?

(ஆ) நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0885 / '08

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிலியந்தலை நாம்பமுனுவையில் நிர்மாணிக்கப்பட்ட டயலொக் தொலைத் தொடர்புகள் கோபுரம் குடியிருப்புக்கள் அதிகாமாக உள்ள பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதையும்,

(ii) 2008.06.29 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றில் மின்னல் தாக்கியதன் காரணமாக கோபுரத்தை அண்மித்த பகுதியில் இருக்கும் வீடுகளில் இருந்த இலத்திரனியல் ஆளித்தொகுதி, வீட்டுப்பாவனை மின்சார உபகரணங்கள் மற்றும் தொலைபேசிகள் என்பவற்றுக்கு கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த சம்பவம் தொடர்பாக பிரதேச மக்களின் கையெழுத்துக்கள் இடப்பட்ட மனுக்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மற்றும் டயலொக் நிறுவனம் உட்பட பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இந்த தொலைத்தொடர்பு கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான அனுமதியை வழங்கும் போது ஆராயப்பட்ட விடயங்கள் எவை என்பதையும்,

(ii) அதற்காக அனுமதியைப் பெறவேண்டிய நிறுவனங்கள் எவை என்பதையும்,

(iii) குறிப்பிடப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரத்தை நிர்மாணிக்க அந்த நிறுவனங்கள் ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) அந்த வீடுகளின் உபகரணங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக இழப்பீடுகளை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0897 / '08

11.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பொருட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளின் பெயர்ப் பட்டியல், அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பதவிகள், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு ஏற்ப தனித்தனியாக யாவை,

(ii) வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் பொருட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளின் பெயர்ப் பட்டியல், அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பதவிகள், மாவட்ட ரீதியில் தனித்தனியாக யாவை,

(iii) இதற்கிணங்க கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் போது வாக்கெடுப்பு நிலைய மட்டத்தில் மற்றும் சாவடி இலக்கங்களின் படி வாக்குக் கணிப்பீட்டு பிரதம உத்தியோகத்தர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களது பெயர்ப்பட்டியல், முகவரிகள் மற்றும் சேவையாற்றுகின்ற நிலையங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் போது செயற்பட்ட கணினி அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் பெயர், பதவிகள் மற்றும் நிறுவனங்கள் தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0906 / ' 08

12.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கெஸ்பேவ நகர சபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அந்நகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1082 / ' 08

13.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 2005 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உதவியாகக் கிடைத்த பணத் தொகை எவ்வளவு,

(ii) அவ்வாறான பணம் எந்த நாட்டிலிருந்து எந்த நிதியத்திற்காகக் கிடைத்தது,

(iii) மேற்படி நிதி அவ்வாண்டினுள் செலவு செய்யப்பட்டதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆண்டினுள் மேற்படி நிதியத்திலிருந்து குறித்த பணிகளை நிறை வேற்றிக்கொள்ள முடியாமல் மீளத் திருப்பியனுப்பப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1083 / ' 0 8

14.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அபிவிருத்தி லொத்தர் சபையினால் கொம்பனித் தெருவில் ஒரு காணியையும் கட்டிடமொன்றையும் கொள்வனவு செய்வதற்காகச் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு,

(ii) அது எந்த ஆண்டில் செலவிடப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணியும் கட்டிடமும் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர், அப்போது அலுவலகம் அமைந்திருந்த கட்டிடம் எவ்வளவு காலம் வாடகை செலுத்திப் பேணிவரப்பட்டது,

(ii) அக்கட்டிடத்துக்கு மாதாந்தம் செலுத்தப்பட்ட வாடகை எவ்வளவு,

(iii) இதன்படி சபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு,

(iv) மேற்படி நிதி ரீதியிலான நட்டத்திற்கு வகைப்பொறுப்புக்கூற வேண்டிய வர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1084 / ' 0 8

15.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— சுகாதார நலத்துறை, போசனை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தேசிய இரத்த மத்திய நிலையம் உள்ளிட்ட இரத்த வங்கியினால் பயன்படுத்தப்பட்ட காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகுதிகளின் பெறுமதி எவ்வளவு,

(ii) களஞ்சியங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகுதிகளின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சட்ட விரோதமாகவும் அதேபோன்று சுகாதார ஒழுக்கவியல்களுக்கு முரணாகவும் கவனமின்றி அல்லது மோசடியான விதத்தில் செயலாற்றியுள்ள குறித்த அமைச்சின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைக யாது,

(ii) இதே செயற்பாட்டுடன் தொடர்புடைய, தேசிய ஆஸ்பத்திரியின் மத்திய இரத்த வங்கியின் மொத்தக் கையிருப்புப் பதிவேடுகளை மாற்றிப் போலியான மொத்தக் கையிருப்புப் பதிவேடுகளைத் தயாரித்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் இதுவரை விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதா,

(iii) இதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் யாவர்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்று சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,__ சட்டமமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"தேசமான்ய ரவீந்திர வணிகசேகர ஒழுங்கமைப்பைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2009 மாச்சு மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும், - சுற்றாடல் பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சுற்றாடல் பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, யூலை 22 ஆம் திகதிய 1559 /10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை(இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, திசெம்பர் 30 ஆம் திகதிய 1582/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, திசெம்பர் 31 ஆம் திகதிய 1582/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2006 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் விமான நிலைய அபிவிருத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, திசெம்பர் 31 ஆம் திகதிய 1582/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும், - பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை, ___ 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 2 அ ஆம் பிரிவின் கீழ் பெறுமதிசேர் வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009, சனவரி 01 ஆம் திகதிய 1582/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர், - காணி எடுத்தற் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள்,- 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 63(2) (ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 சனவரி 20 ஆம் திகதிய 1585/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*8.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

சான்றுப்படுத்தப்பட்ட இலங்கை முகாமைத்துவ கணக்காளர் நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான

மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக'' எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*26.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

27.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை. .

32.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கை நிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0868 / ' 08

1.

கௌரவ சந்திரசேன விஜேசிங்க,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் 'அ' பிரிவின் 3வது தரத்தின் 'ஆ' பிரிவின் தலைமை அஞ்சல் உதவியாளர், பொறுப்பதிகாரி, நிர்வாக உதவியாளர், அஞ்சல் அலுவலக ஆய்வு பரிசோதகர் மற்றும் அஞ்சல் அலுவலக கணக்குப் பரிசோதகர் ஆகிய பதவிகளின் 2001.01.01 ஆந் திகதி தொடக்கம் 2006.12.31ஆந் திகதி வரையிலான சேவை முதிர்வு பட்டியலை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) 2001.01.01 ஆந் திகதி தொடக்கம் 2006.12.31 ஆந் திகதி வரையிலான காலத்தில் தலைமை அஞ்சல் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் நிர்வாக உதவியாளர் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான முன் திகதி இடப்பட்ட கடிதம் வெற்றிடம் ஏற்பட்ட திகதி, வெற்றிடம் ஏற்பட்ட விதம் மற்றும் ஈடுபடுத்த வேண்டிய உத்தியோகத்தரின் பெயர் ஆகியவற்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) ஒருங்கிணைந்த தபால் சேவையின் 'அ' பிரிவின் 3வது தரத்தின் 'ஆ' பிரிவின் தலைமை நிலைய பொறுப்பதிகாரி பதவிகளுக்கு 2002.06.17 ஆந் திகதி தொடக்கம் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருப்பினும் அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் இவர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) இந்த உத்தியோகத்தர்களில் சிலர் தற்போது அறுபது வயதினை பூர்த்தி செய்து ஓய்வில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதனால், அவர்களுக்கு முறையான நியமனக் கடிதங்களை வழங்குமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்குவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0955 / '08

2.

கௌரவ சந்திரசேன விஜேசிங்ஹ;— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) ஒன்றிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவில் 3 "ஆ" தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை 2005.10.12, மற்றும் 2005.10.13 ஆம் திகதிகளில் தபால் தலைமையகத்தில் நடைபெற்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இந் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய ஒன்றிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவில் 3 "ஆ" தரத்திலுள்ள பிரதான தபாலதிபதி, நிருவாக உதவியாளர், தபாலக புலனாய்வுப் பரிசோதகர், தபாலக கணக்குப் பரிசோதகர்கள் ஆகியோரின் பெயர், அலுவலக முகவரி ஆகியவை யாவையென அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந் நேர்முகப்பரீட்சையில் அலுவலகரின் சேவை மூப்பு, சேவை அறிக்கை மற்றும் நேர்முகப்பரீட்சையில் காட்டிய திறன்கள் /ஆளுமை ஆகியவற்றின் கீழ் இவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளை வெவ்வேறாக அவர் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0907 / ' 0 8

3.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) மஹரகம நகர சபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அந்நகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0908 / ' 0 8

4.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அவிஸ்ஸாவெல்ல நகர சபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அந்நகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0909 / ' 0 8

5.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகரசபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடு வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அம்மாநகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0910 / ' 0 8

6.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) மொரட்டுவை மாநகர சபையினால் 2008ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அம்மாநகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0911 / '08

7.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தெஹிவளை — கல்கிசை மாநகர சபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அம்மாநகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0912 / '08

8.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கொழும்பு மாநகர சபையினால் 2008 ஆம் ஆண்டுக்காக அறவிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு வரி வீதம் எவ்வளவு,

(ii) அவ்வரித்தொகை என்ன அடிப்படையின் கீழ் தீர்மானிக்கப்பட்டது,

(iii) அம்மாநகர சபையின் வரி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் அனைத்து இடங்களுக்கும் சென்று சரியான மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனரா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இம்மதிப்பீட்டு வரி அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) ஆமெனில், அதைத் திருத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?